லாக வெளியே பேசப்படுகிறது. அறிவிப்புதான் இன்னும் வரவில்லை என்று பேசப்படுகிறது. எனவே, அதை இந்த மாதம் 30 ஆம் தேதிக்குள்ளாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அறிவிக்கிற ஒரு நிலைமைக்குத் தான் நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்குகூட முடிந்தால், அதை உங்களிடத்தில் சொல்லிக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடையக் கூடியவன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Hostel facilities in Madurai Law College

* 82 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that due to lack of accommodation, hostel facilities could not be extended to many students of the Madurai Law College, who applied for it; and

(*b*) if so, whether there is any proposal with the Government in this regard?

மதுரை சட்டக் கல்லூரியில் விடுதி வசதிகள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், விடுதி வசதிகள் வேண்டும் என விண்ணப்பித்துக் கொண்ட மதுரை சட்டக் கல்லூரியைச் சேர்ந்த பல மாணவர்களுக்கு அந்த வசதிகள் அளிக்க இயலவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) நிதிப் பற்றுக்குறையினால் மதுரை சட்டக் கல்லூரியில் மாண வர்கள் தங்கும் விடுதி கட்டும் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : மதுரை சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர் களுக்கு அங்கே தங்கிப் படிக்கக்கூடிய வசதி இல்லாத காரணத்தால், அரசினால் வழங்கப்படும் உதவித் தொகையைக் கூட பெறமுடியாத நிலை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். மாணவர்கள் தாங்கள் விரும்புகிற

இடங்களில் தங்கிப் படித்தால், அவர்களுக்குரிய உதவித் தொகை அளிக்கப் படுமா? பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும், ஹரிஜன மாணவர்களுக்கும் இந்த வகையில் அரசு உதவித் தொகை வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மதுரை சட்டக் கல்லூரியில் 900 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இதில் 100 மாணவர்கள் கல்லூரியினால் வாடகைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தனியார் விடுதி ஒன்றிலும், தொழிற் பயிற்சி நிலையத்தின் விடுதியிலும் தங்கியுள்ளனர். மதுரை சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு என்று தனியாக விடுதிக் கட்டிடம் கட்ட 1978-79 பட்ஜெட்டில் ரூ. 33.56 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சட்டக் கல்லூரி இயக்குநர் அவர்கள் பரிந்துரைத்துள்ளார். ஆனாலும், நிதிப் பற்றாக் குறையின் காரணமாக இந்தத் திட்டத்தைத் தள்ளிப் போடலாம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விடுதிகளில் தங்கியுள்ள மாணவர் கள் குறிப்பிட்ட விதிகளுக்கு உட்பட்டு வந்தால், அரசின் நிதி உதவிச் சலுகைகள் அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : சட்டக் கல்லூரி மாணவர்கள் தங்களின் பெரும் பகுதியான நேரத்தை விடுதிகளில்தான் கழிக்க வேண்டியிருக்கிறது. காரணம், அவர்களது படிப்பே பகுதி நேரப் படிப்பாகும். ஆகவே, அவர்கள் கவனம் வேறு திசையில் திரும்பாத அளவுக்கு விடுதியிலே நிலைநிறுத்துமாறு செய்ய வேண்டும். எனவே, புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நாள் ஆகும் என்றாலும், வாடகைக்காவது ஒரு கட்டிடத்தை எடுத்து மாணவர்களுக்கு விடுதி வசதி யைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு அதைப் பரிசிலிக்கும்.

THIRU A. R. DAMODARAN: Sir, it is understood that the U.G.C. gives 85 per cent loan for construction of Students' Hostels. May I know whether this scheme is applicable to Government Hostels also in respect of Madurai Law College?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், பதில் அளிக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மதுரையிலே உள்ள சட்டக் கல்லூரிக்கென்று சொந்தமாக இடமில்லாமல் அது இயங்கி வருகிறது. மதுரைப் பல்கலைக் கழகத்திலேயிருந்து தற்காலிகமாக இடத்தை வாங்கி மதுரைச் சட்டக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. மதுரைப் பல்கலைக் கழக நூலகத்தை விரிவு

படுத்த அந்த இடத்திலேயிருந்து சட்டக் கல்லூரியை விடுவிக்க வேண்டும் என்று தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. எனவே, சட்டக் கல்லூரிக்கென்று நிரத்தரமான ஒரு இடத்தை அமைத்து, அதை யொட்டியே விடுதியையும் அமைத்தால், நலமாக இருக்கும். அதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றாலும், ஒரு துணை மதிப்பீட்டின் மூலமாவது நிதியைக் கோரி இதை அமுல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கல்வித் துறை அந்த முயற்சியை மேற்கொள்ளும்.

Private Secondary Schools

*83 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government, that some private Secondary Schools have not appointed Physical Instructors, Drawing Masters and Tamil teachers though there is provision to appoint such teachers for the students studying in 6th, 7th and 8th Standards in High Schools;

(*b*) whether the Government have received any representation that those who possess special certificates in the above subjects, should be given age exemption above 30 years; and

(*c*) if so, the action taken thereon?

தனியார் இடைநிலைப் பள்ளிகள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு உடற்பயிற்சி, ஓவிய, தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கு வழிவகை இருந்தும், சில தனியார் இடைநிலைப் பள்ளிகளில் அந்த நியமனம் நடைபெறவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(இ) மேற்கூறிய பாடங்களில் சிறப்புச் சான்றிதழ் பெற்றோருக்கு 30 வயதுக்கு மேல் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று முறையீடு ஏதும் அரசுக்கு வந்ததுண்டா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?